தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை, எனினும் தனியார் மற்றும் கூட்டுறவுத் துறையின் மூலமாக அத்தகைய தொழிற்சாலையைத் துவக்க முன்வந்தால், அரசு அனைத்து உதவிகளையும் வழங்கும்.

திரு. ப. காளியப்பன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், வடமதுரை, வத்தலக்குண்டு, பழனி பகுதிகளில் உள்ள விவசாயிகள் எளிய முறையில் பயிரிட்டு அதிக மகசூல் செய்யும் பொருள் தக்காளி. அந்தத் தக்காளியை மூலப் பொருளாகக் கொண்டு தயார் செய்யும் தக்காளிப் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலையை அரசே ஏற்கும் எண்ணம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : துணைத் தலைவர் அவர்களே, வேளாண் துறையின் ஒரு பகுதியாக இருக்கக்கூடிய தோட்டக் கலைத் துறை மூலமாக பழங்களை ஏராளமாக உற்பத்தி செய்து, அதிலிருந்து கிடைக்கின்ற பழ வகைப் பொருள்களை உற்பத்தி செய்கின்ற ஒரு தொழிற்பேட்டையைத் துவக்குகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அந்தத் திட்டம் செயல்படுகிற நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

திரு. ப. காளியப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்கான மதிப்பீட்டுப் பட்டியல்-புராஜக்ட் ரிப்போர்ட் தமிழ்நாட்டில் கிடைக்கவில்லை. அதை அரசே கேட்டு வாங்கும் எண்ணம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : துணைத் தலைவர் அவர்களே, பழப் பொருள்களைப் பதப்படுத்தும் தொழில்களைத் துவங்குவதற்கு நாம் முன்வருகிற நேரத்தில் அதற்குத் தேவையான திட்ட மதிப்பீடுகளைப் பெறலாம்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் பகுதி தக்காளி உற்பத்தியில் தமிழ்நாட்டிலேயே முதலிடம் வகிக்கும் பகுதி. அங்கே கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள தக்காளி உற்பத்தியாகிறது. வெளி வட்டங்களிலிருந்தும் அங்கே வந்து விற்பனையாகிறது. சில நேரங்களில் விற்பனை மந்தமாகி, தக்காளி வீணாகி, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே அரசு சார்பில் ஒரு தொழிற்சாலையை தக்காளிக்காக ஏற்படுத்திக் கொடுத்தால் அந்த வட்டத்தினுடைய விவசாயிகளுக்கும், வெளியிலே இருந்து வருகிறவர்களுக்கும் உதவியாக இருக்கும். ஆகவே அரசு அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்தித் தருவதற்கு ஆணை பிறப்பிக்குமா ?

1991 சனவரி 24]

10-00 மணி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியுடன் வினா நேரம் சற்று நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்குப் பதில் சொல்கிற நேரத்திலே தெளிவாகக் குறிப்பிட்டேன். அரசின் சார்பில் தொழில்களைத் தொடங்குகிற திட்டம் இப்போது பரிசீலனையில் இல்லை. தனியாரோ அல்லது கூட்டுறவுத் துறை மூலமாகவோ அந்தப் பகுதியில் தக்காளி பயிர் செய்கிற விவசாயிகள் ஒரு பத்து அல்லது 50 பேர் முன்வந்து அதைப் போன்ற தொழில்களைத் தொடங்க முன்வந்தால் அரசு இப்படிப்பட்ட தொழிற்சாலைகளைச் சரியான முறையில் நடத்துவதற்கு அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்கும். எனவே கூட்டுறவுத்துறை மூலமாக இப்படிப்பட்ட பணிகளைச் செய்வதுதான் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு நல்ல பலனைத் தரும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தென்னை சார்புப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலை துவங்குதல்

* 10295 **திரு. கா. அண்ணாதுரை :**
மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை பகுதியில் தென்னை சார்புப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலை துவக்குகிற திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை பகுதியில் தென்னை சார்புப் பொருட்களைக் கொண்டு தொழிற்சாலை துவக்குகிற திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த அளவில் பட்டுக்கோட்டை மற்றும் பேராவூரணி பகுதியிலே தான் தேங்காய் அதிகமாக உற்பத்தி ஆகிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், தமிழ்நாட்டிலேயே தென்னை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் என்கிற